டானியக் கோரிக்கையில் அந்த ஒரு பொருள் பற்றியே திரு. கோதண்டராமன் அவர்கள் பேசலாம். அதற்கு அமைச்சர், அவர்கள் விரிவான விளக்கம் அளிக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தங்கள் தீர்ப்பிற்கு நான் தலைவணங்குகிறேன். நெருக்கடியான ஒரு பிரச்னைபற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தயவுசெய்து ஒரு நாள் விவாதத்திற்கு அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியாக எழுதிக் கொடுங்கள், அதன்மீது தீர்ப்புக் கொடுக்கிறேன். அடுத்து, அரசினர் மசோதா.

4. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு திருவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ நாடு, 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—(தொடர்ச்சி)

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1968-69-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் எனது கருத்துக்களை இந்தப் பேரவை முன் வைக்க விரும்புகிறேன். 1971-ம் ஆண்டுக்குள்ளாக தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் மின்சார இணைப்பு கொடுக்கப்படுமென்றும், தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்று திகழவேண்டுமென்கிற அரசின் முயற்சி நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால், 'ரூரல் எலக்ட்ரிஃபிக்கேஷன்' என்ற தலைப்பில், கிராமப்புற மின்சார வசதிக்காக 1968-69-ம், 69-70-ம் ஆண்டுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு 1,250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டுக்குள்ளாக தமிழகம் முழுவதிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு